03.06.2026

O.S.N0. 86/2020

D.W.1.திரு.நெல்லைகுமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

1ம் வாதி எனது உடன்பிறந்த சகோதரர் அய்யாத்துரையின் மனைவி என்றால் சரிதான். எனது அப்பாவின் சொத்தில் எனக்கு என்ன உரிமை உண்டோ, அதே தான் எனது உடன்பிறந்தவர்களுக்கும் உண்டு என்று சொன்னால் எனக்கு என்ன சொத்து கொடுக்கப்பட்டது எனக்கு பாத்தியப்பட்டதாகும். எனது அப்பா இறக்கும் வரை என்ன வேலை பார்த்தார் என்றால் மில்லில் வேலை பார்த்தார். மில்லில் வேலை பார்த்து ஓய்வுபெற்றபின் விவசாயம் பார்த்தார். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் எனக்கு உயில் மூலம் பாத்தியப்பட்ட சொத்தில் ஓர்க் ஷாப் வைத்துள்ளேன். 1ம் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள தபசில் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பாவிற்கு எத்தனை வீடு பாத்தியப்பட்டது என்றால் இரண்டு வீடுகள் பாத்தியப்பட்டது. எத்தனை வயல்கள் பாத்தியப்பட்டது என்றால் இரண்டு வயல்கள் பாத்தியப்பட்டது. வேறு என்ன சொத்துக்கள் உள்ளது என்றால் 3 புஞ்சை நிலங்கள் உள்ளது. எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா என்றால் அனைத்து சுய சம்பாத்திய கிரைய சொத்துக்கள் ஆகும். மேற்படி எனது அப்பா வாங்கிய கிரையப்பத்திரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால்

எனக்கு ஞாபகமில்லை. நான் அப்பா வாங்கி கிரைய சொத்துக்களின் பத்திரங்களை நகல் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்ன என்று கேட்டால் அதைபற்றி எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணம் என்ன என்று கேட்டால் அதைபற்றி எனக்கு ஞாபகமில்லை. எனது அப்பா கிரையம் வாங்கியதாக சொன்ன பத்திரங்களை நான் எதையும் பார்த்தது இல்லை என்றால் சரிதான். அதன் அசல் பத்திரங்கள் அனைத்தும் எனது அண்ணன் அய்யாத்துரையிடம் உள்ளது. பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.7 ஆவணங்களை பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகமில்லை. எனது மகன் மகாராஜனுக்கு நான் எழுதிக்கொடுத்த பத்திரத்தின் அசல் தான் பி.வா.சா.ஆ.5 என்று சொன்னால் சரிதான். எனது மகன் மகாராஜன் என்னுடன் தான் இருக்கிறான் என்றால் சரிதான். எனது மகனுக்கு நான் எழுதிக்கொடுத்த சொத்திற்கு பட்டா, ரசீது அனைத்தும் எனது அப்பாவின் பெயரில் உள்ளது என்றால் இல்லை. எனது பெயரில் உள்ளது. எனது மகனுக்கு பத்திரம் போட்டபின்னர் அவரது பெயரில் உள்ளது. உயிலை பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் நான் எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்த பிறகு எனது அம்மா ஆட்சேபனை செய்து வழக்கு தாக்கல் செய்தபின்னர் தான் மேற்படி உயிலை பற்றி எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் கொடுத்தேன் என்றால் நான் அந்த சொத்து ஆண்டு அனுபவித்து வந்ததால்

செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன். அந்த சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் நான் வேலை இல்லாமல் இருந்ததால் அந்த இடத்தில் ஓர்க் ஷாப் நடத்த எனது அப்பா 1997 ற்கு முன்பாக கொடுத்துவிட்டார். 1997 ற்கு முன்பாக ஐந்து வருடங்களுக்கு முன்பாக எனக்கு சொத்தை வாய்மொழியாக கொடுத்தார். எனக்கு எழுத்து மூலமாக சொத்து கொடுக்கப்பட்டதா என்றால் வாய்மொழியாக தான் கொடுத்தார். எனது அம்மா எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அவருக்கும் சொத்தில் உரிமை உண்டு என்று சொல்லி வழக்கை தாக்கல் செய்தார். அந்த வழக்கை நான் நடத்தினோ என்றால் நான் நடத்தவில்லை. எனது அம்மா தான் நடத்தினார். எனது அம்மா தாக்கல் செய்த வழக்கை நான் ஒப்புக்கொண்டேனா என்றால் நான் ஒப்புக்கொண்டதால் தான் ஆளுக்கு பாதி என்று நீதிமன்றத்தில் தீர்ப்பானது. அந்த வழக்கு யாருக்கு ஜெயித்தது என்றால் எனது அம்மாவுக்கு தான் ஜெயித்தது. எனது அம்மா வழக்கு தாக்கல் செய்தபின்னர் தான் எனக்கு உயில் உள்ள விவரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நானும், எனது மனைவியும் ஆஜரானோம் என்றால் நான் மட்டும் ஆஜரானேன். முன் விசாரணையில் எனது அம்மா தாக்கல் செய்த வழக்கில் எனக்காக வழக்கறிஞர் பிரபாகர் ஆஜரானார் என்று சொன்னால் இல்லை. அவர் எனது அம்மாவிற்காக தான் ஆஜரானார். வழக்கறிஞர் பிரபாகர் எனக்காக எந்த வழக்கிலும் ஆஜராகவில்லை என்றால் எனது அம்மா தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு எதிராக ஆஜரானார். இந்த வழக்கில் அவர் ஆஜராகவில்லை. பி.வா.சா.ஆ.16, பி.வா.சா.ஆ.17 ஆவணங்களை யார்

நகல் எடுத்துக்கொடுத்தார்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. எனது அம்மா தாக்கல் செய்த வழக்கில் எனது அம்மாவை விசாரிக்கும்போதும், சாட்சி சௌந்திரப்பாண்டியை விசாரித்தபோதும் நான் இருந்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. எனது அம்மா தாக்கல் செய்த வழக்கில் எனது அம்மாவிற்காக ஆஜரான வழக்கறிஞர் யார் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

சாட்சியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மறுநாளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,
Tirunelveli.